**அனுப்புநர்**
முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**
செய்தி ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்.

**ந.க.எண். 127311/எச்.1/2019** **நாள் : 17.08.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6 – மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு / மறுதேர்வு, மார்ச் 2020 – விடைத்தாள் நகல்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் – மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் – செய்திக் குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

மார்ச் 2020, மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு / மறுதேர்வெழுதி விடைத்தாள் நகல்கோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கு விடைத்தாட்கள் நகலினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்வது, மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை அனைத்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தங்கள் வானொலி / தொலைக்காட்சி / செய்தித்தாளில் செய்தியாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

''இது விளம்பரம் அல்ல'' எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**செய்திக் குறிப்பு

ஒம்./–
இயக்குநர்

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்விஅலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்விஅலுவலர்கள்.
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
4. கண்காணிப்பாளர், எச்.3 பிரிவு (அலுவலகம்).

**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு மார்ச் 2020**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

மார்ச் 2020, மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு / மறுதேர்வெழுதி விடைத்தாட்களின் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **18.08.2020 (செவ்வாய்கிழமை) பிற்பகல்** முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று Notification பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் – II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால், இதே இணையதள முகவரியில் "Application for Retotalling/Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தினை, பூர்த்தி செய்து இரு நகல்கள் எடுத்து **21.08.2020 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி முதல் 25.08.2020 (செவ்வாய்கிழமை) மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**மறுமதிப்பீடு**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ. 505/– |

**மறுகூட்டல்–II**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

**ஒம்./–**
**இயக்குநர்**

நாள் : 17.08.2020.
இடம் : சென்னை – 600 006.